சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

EP 19/2023 in OS 10/2010

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 08ம் நாள் RW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. வெங்கடாசலபதி | நாள் 08.06.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

**<u>வ.வி 4/2026 பகரப்பட்ட உத்தரவுப்படி எதிர் மனுதாரர் சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் முவ 10/2010 ல் வழுங்கபட்ட தீர்ப்பு என்றால் சரிதான். அது **ம.தா.சா.ஆ.1..** நிறைவேற்று மனுவில் எனக்கு அழைப்பாணை அனுப்பட்டு நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜரானேன். முதலில் எதிருரை தாக்கல் செய்யாமல் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னர் மனு தாக்கல் செய்து எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். **எ.ம.தா.சா.ஆ.1.** ல் முதல் பக்கத்தில் உள்ள எழுத்துக்களை மனுதார் தான் எழுதினார். அப்போது ராமசாமி, தண்டபாணி மற்றும் 2, 3 நபர்கள் இருந்தார்கள். **எ.ம.தா.சா.ஆ.1. ல்** சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை. **எ.ம.தா.சா.ஆ.1. ல்** மனுதார் கையொப்பம் போட்டதாக என்னுடைய எதிருரையில் கூறியுள்ளேனா என்றால் ஞபாகம் இல்லை. **எ.ம.தா.சா.ஆ.1.** ல் அனைத்து நிலுவைத் தொகைகளும் எவ்வாறு கணக்கிடப்பட்டது என்றால்

மனுதாரருக்கு தான் அது தெரியும். **எ.ம.தா.சா.ஆ.1 ல்** இரண்டாவது பக்கத்திலுள்ள கையெழுத்துக்கள் யாருடைய கையெழுத்துக்கள் என்றால் மனுதாரருக்கு தான் அது தெரியும். **எ.ம.தா.சா.ஆ.1.** மூன்றாவது பக்கத்திலுள்ள கையெழுத்துக்கள் யாருடைய கையெழுத்துக்கள் என்றால் மனுதாரருக்கு தான் அது தெரியும்.

2. **எ.ம.தா.சா.ஆ.1.** ல் மனுதாரின் கையொப்பங்கள் வெவ்வேறாக உள்ளன என்றால் மனுதாரர் தான் அவ்வாறாக போட்டார். அவ்வாறு உள்ள கையெழுத்துக்களை மனுதாரர் போடவில்லை என்றால் சரியல்ல. **எ.ம.தா.சா.ஆ.1.** உண்மையான ஆவணமாக இருந்திருந்தால் அதனை எதிருரையுடன் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எதிருரை மற்றும் முதல் விசாரணையில் 2017 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ரூ.34,500 கொடுத்தது எந்த தேதி என்பது எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையில் தொகை கொடுத்திருந்தால் தேதி குறிப்பிட்டு இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல் 20.02.2018, 13.11.2018 மற்றும் 16.03.2023 தேதிகளில் மனுதாரரிடம் நான் எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. மு.வ.10/2010 தீர்ப்பின் மீது எவ்வித மேல் முறையீடும் நான் செல்லவில்லை. மேல் முறையீடு செய்வதற்கு நீதிமன்றத்தில் நகல் பெற்றேனா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. எதிருரையில் மேல் முறையீட்டு எண் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது வழக்கறிஞருக்கு தான் தெரியும். அது பற்றி நான் வழக்கறிஞரிடம் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. என்னிடம்

காண்பிக்கப்படும் ஆவணம் நான் மேல் முறையீடு செய்வதாக குறிப்புள்ளதா என்றால் நான் வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். நான் மேல் முறையீடு ஏதும் செல்லாமல் எதிருரை மற்றும் முதல் விசாரணையில் மேல் முறையீடு செய்யதாக மனுவிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. தொகையை கொடுத்துவிட்டதாக கூறும் போது எதற்காக மேல்முறையீடு செய்தேன் என்றால் மனுதாரர் மேற்கொண்டு ரூ.60,000 கேட்டதால் மேல்முறையீடு செய்தேன். **எ.ம.தா.சா.ஆ.1.** பொய்யான ஆவணம் என்றாலும், மனுதாரரை ஏமாற்ற தொகை கொடுத்துவிட்டதாக பொய்கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. **எ.ம.தா.சா.ஆ.1. ல்** கண்ட கையொப்பங்கள் மனுதாரரின் கையொப்பங்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**